182
79

001394

## சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – 2013–2014 ம் ஆண்டில் 32 மாவட்டங்களில் உள்ள 873 பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்களின் சமையலறைகளை (Kitchens) நவீனப்படுத்துதல் ரூ.1,95,11,550/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.4–3) துறை

அரசு ஆணை (ப) எண்.05

நாள்.07.01.2014.
திருவள்ளுவர் ஆண்டு 2044
மார்கழி 23 ஆம் நாள்

படிக்கப்பட்டவை:-

1. அரசு ஆணை (ப) எண்.68, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்.29.06.2012.
2. சமூகநல இயக்குநர் அவர்களின் கடித எண்.24550/சஉதி(தி–1) / 2013, நாள்.11.06.2013, 02.12.2013 மற்றும் 12.12.2013.

-------

ஆணை :-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2012–2013 ஆம் ஆண்டிற்கு 887 சத்துணவு மையங்களில் உள்ள சமையலறைகளை நவீனப்படுத்த ஒரு மையத்திற்கு ரூ.22,000/– வீதம் மொத்தம் ரூ.1,95,14,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேலே இரண்டில் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் சமூகநல இயக்குநர் தனது கருத்துருவில் 2013–2014 ஆம் ஆண்டில் சமையலறைகளை நவீனப்படுத்த ரூ.195.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அதில் 873 சமையலறைகளை நவீனப்படுத்த மையம் ஒன்றுக்கு ரூ.22,350/– வீதம் கீழ்கண்டவாறு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்:-

| பொருளின் பெயர் | விலை ரூ. |
|---|---|
| நான்கு சிலிண்டர்கள் ரூ.1450 x 4<br>(ஒரு சிலிண்டர் வாங்க டெபாசிட் 1450) | ரூ.5800.00 |
| ஒரு ரெகுலேட்டரின் விலை ரூ.150/– | ரூ.150.00 |
| பெரிய எரிவாயு அடுப்பு ( இரண்டு பர்னர்கள் கொண்டது) | ரூ.5200.00 |
| அடுப்பு மேடை , தடுப்புச் சுவர் மற்றும் புகை போக்கி ஆகிய கட்டுமான பணிகளுக்காக | ரூ.6200.00 |
| திரும்ப வரவிடாத வால்வு, காப்பு வால்வு மற்றும் பாதுகாப்பு வசதிக்கு | ரூ.5000.00 |
| மொத்தம் | ரூ.22,350.00 |

// த.பி.பா. //

192

3. சமூக நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்றுக்கொண்டு, ஒரு சத்துணவு மையத்தின் சமையலறையை நவீனப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும் செலவினம் மற்றும் மையங்களின் விவரப்படி (இணைப்பு I மற்றும் II ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு) 32 மாவட்டங்களில் உள்ள 873 சத்துணவு மையங்களின் சமையலறைகளை நவீனப்படுத்த ஒரு மையத்திற்கு ரூ.22,350/– வீதம் மொத்தம் ரூ.1,95,11,550/– (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சத்து பதினோராயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2236 சத்துணவு – 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102 மதிய உணவு பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II மாநிலத் திட்டம்" KN – அரசுப் பள்ளிகளிலும் அரசு மானிய உதவி பெறும் பள்ளிகளிலும் உள்ள 10–14 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – 24 பொருள்களும் வழங்கலும் (த.தொ.கு.2236–02–102–KN-2408)"

5. மேலும், இரண்டு பர்னர்களுடன் கூடிய பெரிய அளவிலான எரிவாயு அடுப்புகள் வாங்குதல், சமையல் மேடை அமைத்தல் மற்றும் பாதுகாப்பு வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன் படி பணிகள் மேற்கொள்ளவும் பள்ளி சத்துணவு மையங்களை நவீனப்படுத்த ஒதுக்கப்படும் நிதியை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு விடுவித்து திட்டத்தை செயல்படுத்த சமூக நலத்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தை அந்தந்த மாவட்டங்களில் செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் பயனாளிகள் எண்ணிக்கைக்கு தக்கவாறு சிலிண்டரின் எண்ணிக்கையை கணக்கிட்டு அதன் அடிப்படையில் சிலிண்டர் டெபாசிட் மற்றும் ரெகுலேட்டரின் செலவினத்தை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அத்துறையின் அ. சா.கு. எண்.76749 / நிதி (சந) / 2013, நாள்.03.01.2014–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது
அரசுச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை –2.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை (கிழக்கு, தெற்கு, வடக்கு)
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள். (சமூகநல இயக்குநர் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –18.
பள்ளிக்கல்வித்துறை இயக்குநர், சென்னை –6.
ஆரம்பப் பள்ளி கல்வித்துறை இயக்குநர், சென்னை –6.
இயக்குநர், அனைவருக்கும் கல்வித் திட்டம், சென்னை –6.

193

## இணைப்பு – 1

அரசாணை (ப) எண்.05, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்.07.01.2014

| பொருளின் பெயர் | விலை ரூ. |
|---|---|
| நான்கு சிலிண்டர்கள் ரூ.1450 x 4<br>(ஒரு சிலிண்டர் வாங்க டெபாசிட் 1450) | 5,800.00 |
| ஒரு ரெகுலேட்டரின் விலை ரூ.150/– | 150.00 |
| பெரிய எரிவாயு அடுப்பு ( இரண்டு பர்னர்கள் கொண்டது) | 5,200.00 |
| அடுப்பு மேடை , தடுப்புச் சுவர் மற்றும் புகை போக்கி ஆகிய கட்டுமான பணிகளுக்காக | 6,200.00 |
| திரும்ப வரவிடாத வால்வு, காப்பு வால்வு மற்றும் பாதுகாப்பு வசதிக்கு | 5,000.00 |
| மொத்தம் | 22,350.00 |

பெ.மு. பஷீர் அஹமது
அரசுச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

21.1.14

ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், சென்னை –15.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5.

நகல்
நிதி (வ.செ.பொ.II) / (சமூக நலம்) துறை, சென்னை –9.
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.2) துறை, சென்னை –9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/5

195

1886
33

## இணைப்பு – 2

அரசாணை (ப) எண்.05, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள்.07.01.2014

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | 2013–14 ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் மையங்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 36 | 804600 |
| 2 | திருவள்ளூர் | 27 | 603450 |
| 3 | கடலூர் | 27 | 603450 |
| 4 | விழுப்புரம் | 27 | 603450 |
| 5 | வேலூர் | 27 | 603450 |
| 6 | திருவண்ணாமலை | 27 | 603450 |
| 7 | சேலம் | 27 | 603450 |
| 8 | நாமக்கல் | 27 | 603450 |
| 9 | தருமபுரி | 27 | 603450 |
| 10 | கிருஷ்ணகிரி | 27 | 603450 |
| 11 | ஈரோடு | 27 | 603450 |
| 12 | கோயம்புத்தூர் | 27 | 603450 |
| 13 | நீலகிரி | 27 | 603450 |
| 14 | தஞ்சாவூர் | 27 | 603450 |
| 15 | நாகப்பட்டினம் | 27 | 603450 |
| 16 | திருவாரூர் | 27 | 603450 |
| 17 | திருச்சி | 27 | 603450 |
| 18 | கரூர் | 27 | 603450 |
| 19 | பெரம்பலூர் | 27 | 603450 |
| 20 | அரியலூர் | 27 | 603450 |
| 21 | புதுக்கோட்டை | 27 | 603450 |
| 22 | மதுரை | 27 | 603450 |
| 23 | தேனி | 27 | 603450 |
| 24 | திண்டுக்கல் | 27 | 603450 |
| 25 | இராமநாதபுரம் | 27 | 603450 |
| 26 | விருதுநகர் | 27 | 603450 |
| 27 | சிவகங்கை | 27 | 603450 |
| 28 | திருநெல்வேலி | 27 | 603450 |
| 29 | தூத்துக்குடி | 27 | 603450 |
| 30 | கன்னியாகுமரி | 27 | 603450 |
| 31 | திருப்பூர் | 27 | 603450 |
| 32 | சென்னை மாநகராட்சி | 27 | 603450 |
| | மொத்தம் | 873 | 19511550 |

பெ.மு. பஷீர் அஹமது
அரசுச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

196